ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

தடிக்கழுதை.

பாட்டும் ஆண்பிள்ளைவிண்பிள்ளைசிந்தும்
அடங்கியிருக்கின்றன.

சென்னை

இவை சிறுமணவூர்



முனிசாமிமுதலியாராலியற்றப்பட்டு

தாண்டவராயபிள்ளைவீதி (௬-ளை)

கிருபாலக்ஷ்மிவிலாசஅச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1900

நீதிச்சிந்துவென்னும்

பெண்புத்திமாலை

அன்னைதந்தைகளை தெய்வமென்றே தினம்
அன்பாயுபசரிப்பாள்-பதிவிரதை
இன்னிலத்தினில்கெட்ட துரோகியெனும்பேரை
ஏற்றுக்கொள்மூட தடிக்கழுதை ௧
சொந்தக்கணவனொரு அந்தகனானாலும்
வந்தனைசெய்திடுவாள் பதிவிரதை-இல்லாமல்
சிந்தையில்வெவ்வேறு எண்ணத்தாய்கணவனை
சீறித்திரிபவள்கெட்ட-தடிக்கழுதை ௨

தனதுகணவன்மூட தடியனாயிருந்தாலும்
தன்மையுடனிருப்பாள் பதிவிரதை-இல்லாமல்
மனதுக்கிசைந்த மன்னனாயிருந்தாலும்
மதியாமல்பேசிடுவாள் தடிக்கழுதை ௩

மாமியாரடித்தாலும் நாம்செய்தகுற்றமென்று
மவுனமாயிருப்பாள் பதிவிரதை-இல்லாமல்
சாமியைபோலே யாரையுமதியாமல்
சண்டைக்கிழுப்பவளே தடிக்கழுதை ௪

கணவன்சம்பாதனையைக் கண்டுசம்சாரத்தில்
வைத்தாயிருப்பவளே பதிவிரதை-இல்லாமல்

கணவனைமதியாமல் கண்டபடியழித்து
கடன்காரனுக்குவாள் தடிக்கழுதை ௫
தண்ணிக்குப்போனாலும் தன்னடிபிசகாமல்
தலைகுனிந்துபோவாள் பதிவிரதை-இல்லாமல்
என்னத்தொழிலாக தெருவில்வந்தாலும்சண்டை
என்னதென்றோடுவாள் தடிக்கழுதை ௬
அன்னியபுருஷர்மெத்த அழகாயிருந்தாலும்
ஆசைவையாள்நல்ல பதிவிரதை இல்லாமல்
என்னசாதியாயிருந்தாலும் புருஷர்மேல்
இச்சைகொண்டுத்திரிவாள்-தடிக்கழுதை ௭
கொண்டையில்மலர்சூடி தெருவேகவொண்ணுதென்
கூச்சத்துடனிருப்பாளபதிவிரதை-இல்லாமல்] ௮
செண்டுப்பூவானாலும் கொண்டையில்முடித்துத்
தண்டுத்தனங்கள்செய்வாள் தடிக்கழுதை ௮
கொண்டகணவன்மாமி மாமன்றடித்தாலும்
குறுக்கப்பேசாதிருப்பாள் பதிவிரதை-இல்லாமல்
லண்டத்தனமாகச்-சண்டைக்கிழுத்தவர்கள
மானங்கெடுத்திடுவாள் தடிக்கழுதை ௯
காலையிலெழுந்து கணவனடிபணிந்துஅவன்
கருத்தைபோலேநடப்பாள பதிவிரதை இலலாமல்
மேலைக்கிசோம்பலாய் பாயில்படுத்தபடி
வீண்பொழுதைக்கழிப்பாள தடிக்கழுதை ௰
அங்கம்பசித்தொருவர் ஐயமென்றுவந்தால்
அன்பாயுபசரிப்பாளபதிவிரதை இல்லாமல்

தங்கவொட்டாமலே சீரித்தெருவில்வெட்டித்
தள்ளப்போவாள்மூடத் தடிக்கழுதை ௧௧
அண்டைவீடெதிர்வீடு அருமுகமானாலும்
அகத்தைவிட்டுப்பிரியாள் பதிவிரதை-இல்லாமல்
லண்டசினேகஞ்செய்து கண்டவிடந்திரிந்து
சண்டையிழுத்திடுவாள் தடிக்கழுதை ௧௨
கட்டினதாலி கயரோடிருந்தாலும்
கணவனைவெறுக்காள் பதிவிரதை
மட்டித்தடியனென்னை கட்டினநாள்முதல்
மரம்போலிருந்தேனென்பாள தடிககழுதை ௧௩
வாசற்படிகடந்தால் வருங்குற்றம்நமக்கென்று
வண்மையாயுள்ளிருப்பாள பதிவிரதை-இல்லாமல்
பேசஅயல்வீடு யெங்குங்கலகத்தை
பெருகச்செய்துவருவாள் தடிக்கழுதை ௧௪
குடும்பங்கலையாமலே கூட்டமாயெல்லோரும்
கூடியிருக்கச்செய்திடுவாள பதிவிரதை-இல்லாமல்
நடுங்கயெல்லோரையும் பேசிகுடும்பமதை
நாலாய்க்கலைத்திடுவாள் தடிக்கழுதை ௧௫
அழகிலாக்கணவனாயிருந்தாலும் அவனன்றி
பன்னியரைநாடாள் பதிவிரதை-இல்லாமல்
வொழுங்காயொருவன்வரக் கண்டாலவனைத்தேடி
ஒருமித்துசேர்ந்திடுவாள் தடிக்கழுதை ௧௬
கதிரவனுதிக்காமுன் காலைக்கடன்முடித்து
கணவனெதிர்வருவாள் பதிவிரதை-இல்லாமல்

பிரதிதினமுங்கணவன் பிரட்டினாலும்பெருந்
திண்டுபோல்தூங்குவாள் தடிக்கழுதை கஎ
அறஞ்செயவிரும்பென ஔவையுரைத்தமொழி
அணுவளவும்பிசகாள் பதிவிரதை- இல்லாமல்
தரும்பிச்சையைக்கூடத் தடுத்துவேண்டாமென்று
தானுங்கொடுக்கவொண்ணாள் தடிக்கழுதை கஅ
உண்டிசுருங்குதல் பெண்டிர்க்கழகென்ப
துண்மையெனநடப்பாள்பதிவிரதை-இல்லாமல்
கண்டபாட்டுகள் ஆட்டங்கள்பார்க்கவும்
கைவிரித்துத்திரிவாள் தடிக்கழுதை க௯
ஊருடன்பகைக்கின் வேருடன்கெடுமென்ற
உண்மையையறிந்துக்கொள்வாள்பதிவிரதை
ஆராகிலுஞ்சரிவாங்கள் வெளியிலென்று
அதட்டித்திரிந்திடுவாள் தடிக்கழுதை உ௰
சக்களத்தியீன்ற பிள்ளையாயிருந்தாலும்
சமமாய்ப்பார்த்திருப்பாள் பதிவிரதை- இல்லாமல்
மிக்கவழகுள்ள சேயனாயிருந்தாலும்
மெலியமிரட்டிடுவாள் தடிக்கழுதை உக
இரப்பவர்க்கு யிடவேணுமென்பதை
எண்ணிநடந்திடுவாள்பதிவிரதை-இல்லாமல்
வரக்கண்டவுடனிங்கு வைத்திருக்குதோவென்று
வாதுசெய்தோட்டுவாள் தடிக்கழுதை
பணிகளிருந்தாலும் அணிந்துவெளியில்வந்து
பாதையிலநடக்காள்பதிவிரதை-இல்லாமல்

துணியாகிலும்ஒழுங்கா யலங்கரித்துக்கொண்டு
சொகுசாய்த்திரிந்திடுவாள் தடிக்கழுதை ௨௫
இன்னிலடக்கையை சொன்னேன்முனிசாமி
இதைத்தெரிந்துகொள்வாள்-பதிவிரதை - இல்லாமல
என்னபாட்டுஇதை அச்சிலிட்டாயென்று
என்னைப்பழிப்பவளே தடிக்கழுதை ௨௬
பெண்புத்திமாலை-முற்றிற்று

ஆண்பிள்ளைவீண்பிள்ளைசிந்து.

காப்பு - வெண்பா

பாருலகினர்தம் தீயமாறிமாறிப்
போர்கள்நெறிவிளங்கப் பேசுதற்கிங்-கோரும்
மும்மலமும்முச்சுடரும் முப்பாலுக்கப்பாலுஞ்
செம்மலிணைத்தாளிணையேசேர்

கண்ணிகள்

சீர்மலிகியசராசரமாயெழிற்
சிவமதைச்சேர்ந்தவ ஆண்பிள்ளை
உயர்தவமதிற்சார்ந்தவ ஆண்பிள்ளை
பார்வருஉடலும்மாய்மனதுகொண்டு
பாவத்தினிலுழன்றவன் வீண்பிள்ளை
சத்துச்சித்தானந்தமாகியபரவெளி
தன்னையறிந்தவ ஆண்பிள்ளை
மெய்யிற்றன்னையறிந்தவ ஆண்பிள்ளை
மூத்திமுதல்வனை பணியாமல்நாடோறும்

Best copy available

மூடமாய்த் திரிந்தவன் வீண்பிள்ளை
மும்மலமுங் கடந்த மூர்த்தியினருள் பெற
முனைந்து திரிந்தவ னாண்பிள்ளை
மனங்களித்துப் பரிந்தவ னாண்பிள்ளை
இம்மகிதல வாழ்வை சதமெனவெண்ணியே
யேங்கியலைந்தவன் வீண்பிள்ளை
நாலிரண்டுக்குமெட்டாநாதன் றிருவடியை
நாளுந்துதிப்பவ னாண்பிள்ளை
வினைக்காகப் பயந்தவ னாண்பிள்ளை
பாலினுமின்சொற் பாவையர் கண்மேல்
பிரிவுகொண்டலைந்தவன் வீண்பிள்ளை
ஆதிமூலமேயென்று ஓதுகஜேந்திரனுக்
கருளியதை யறிந்தோ னாண்பிள்ளை
பற்றுத்திறனறமே புரிந்தோ னாண்பிள்ளை
பாதகனாய்ப் புவியில் வீணர்கடமைக்கூடி
பாவலர்களைப் பழித்தோன் வீண்பிள்ளை
ஆதியனாதி சோதியாய் நின்றிலங்கும்
அய்யனை யறிந்தவ னாண்பிள்ளை
ஒளிர்மெய்யனை யறிந்தவ னாண்பிள்ளை
ஓதியுணராமல் மாதரைக்கூடி
யுறக்கத்தி லலைந்தவன் வீண்பிள்ளை
பஞ்சரக்கூட்டினி லிருந்து நடனமிடும்
பரமனை யறிந்தவ னாண்பிள்ளை
தன்திறமையால் தெரிந்தவ னாண்பிள்ளை

வஞ்சனைசெய்மடமாதர்கள்மயக்கத்தில்
வாடிவிழிப்பவனை வீண்பிள்ளை
சந்த்ரசடாக்ஷரசங்கரனையென்று
சாற்றித்திரிந்தவ ஞாண்பிள்ளை
நிதம்போற்றித்திரிந்தவ ஞாண்பிள்ளை
சுந்தரஞ்சேர்மடமாதர்கள்மையலால்
சோர்வுற்றலைந்தவன் வீண்பிள்ளை
மெய்யடியார்களைக்கண்டேபணிந்து
மேவிநடப்பவ ஞாண்பிள்ளை
மலர்தூவிவிடுப்பவ ஞாண்பிள்ளை
வையகமீதில்வீணரைககூடி
மதிகெட்டலைபவன் வீண்பிள்ளை
சத்திரஞ்சாவடிசாலைகள்சோலைகள்
தானமைத்திடவ ஞாண்பிள்ளை
கொடுங்கான்திரிந்திட்டவ ஞாண்பிள்ளை
சித்திரவிலைமாதாகள்மெச்சிடமேடைகள்
செம்பொன்னளித்தவன் வீண்பிள்ளை
தேவாலயங்களுந்திகழ்மாடங்களுங்கண்ட
தேசங்கள்திரிந்தவ ஞாண்பிள்ளை
நல்லோர்கள்வாசங்கள்புரிந்தவ ஞாண்பிள்ளை
வானவாணர்களுக்கும்பத்தர்க்குமாசைசொல்லி
பலகால்திரியச்செய்தோன் வீண்பிள்ளை

ஆண்பிள்ளைவீண்பிள்ளைசிந்து-முற்றிற்று